தேசபாரதி தீவகம் வே.இராசலிங்கத்தின் 'கனடாக் காவியம்'!

Written by - தகவல்: தீவகம் வே.இராசலிங்கம் -
Sunday, 21 October 2018 05:28 - Last Updated Sunday, 21 October 2018 05:34

1 / 3



தேசபாரதி தீவகம் வே .இராசலிங்கத்தின் 'கனடாக் காவியம் '!

Written by - தகவல்: தீவகம் வே.இராசலிங்கம் -
Sunday, 21 October 2018 05:28 - Last Updated Sunday, 21 October 2018 05:34

காவியம் என்பது
கனடாவின் பல்வித
ஓவியங்களில் இருந்து பிறந்தவைதான்!

இங்கிருந்துதான் எனது நிலத்தின்
சலசலக்கும் சங்கீதம் தெரிந்தது..

சோமசுந்தரப் புலவரில் இருந்து இன்றைய
தேமதுரப் பாவலர்கள்வரை என்னைப்
பரிபாலிக்கிறார்கள்...

கனடா எனது உயிரைப் பிடித்து வைத்திருக்கும்
ஒப்பற்ற காண்மயம்...

ஒவ்வொரு அதிகாலையின் உள்ளும் புறமும்
செவ்வரிகளில் எனது சிந்தை துளிர்க்கிறது...

பலவாக...எனது தாய்நிலமும்..., எமது
தந்தை தாய் என்கத்-
தமிழ்மொழியின் செம்மொழி என்கத்
தொல்காப்பியன் என்ற
சொல்வரிச் சிற்பியும், எண்ணற்ற
மொழிகளில் பல்லாயிரம் வருடங்களின் பின்னும்
பற்றி எழுந்து நிற்கின்ற வள்ளுவனும்...
அவ்வையும் பட்டினத்தானும் ...
பாவின் கோவைப்பழம் பாரதியும், சமீபத்திய
எம் கண்களுக்குத் தெண்ணீர் வயற்கங்கைச்
சிந்து புகட்டிய கண்ணதாசனும் ... இன்னுமாக
தமிழ்மொழியின் அமிழ்தம் என்கத்
தந்து நிற்கும் தமிழ்நாட்டுத்
தங்கப் பாளங்கள் தந்த பல
அபரிதமான அன்புப் பரிசல்களில் எங்கள்
திருவாசக அரண்மனையும் தெரிகிறது...!
எல்லாவற்றிலும் மொத்தமாகக் கருவுற்றுக்
கலையாது நிற்பதுதான் இந்தக்
கனடாக் காவியம்...!

இந்தக் கனடாக் காவியம் தந்த
கனிசமான கணக்குகளில் இருந்து நான்
கணிதம் பெற்றிருக்கிறேன்...

அவர்களின் பாராட்டுக்களில் எனது
பாக்களின் தேரோட்டம் நடக்கிறது...!

என்னை, எனக்காய் இந்தக்
கனடிய தேசத்துக் கங்கைப் பரப்புகளாயும்..
உலக வண்ணம் என்னை
விலகாத கைகளாக, விழுந்துவிடாமல் வைத்திருக்கும்
தமிழ்நிலப் பெற்றவர்களுக்கும் இந்தக்
கனடாக் காவியம் என்கின்ற
நன்றிக் காணிக்கையாகச்
சமர்ப்பிக்கின்றேன் அன்பர்களே!

கனடாக்காவியம்
CANADA AN EPIC
By
Thesapaarathy Theevagam V. Rajalinga

கனடாவைத் தளமாகக் கொண்டு
நூற்றி ஐம்பதாவது அகவையைப் போற்று
ஒரு கவிதைப் பதிவு

தேசபாரதி தீவகம் வே. இராசலிங்கம்
ஐப்பசி-2018

என்னை மதிக்கும் அறிஞர்களதும்,
நான் பதிக்கின்ற நூலகத்துப்
பரந்தாமர்களுக்கும்
இந்தக் கனடாக் காவியத்தை
உங்கள் கைகளின் வண்ணமாகக்
கனிந்தளிக்கும் நாளை எண்ணிக்
களிக்கின்றேன்..
அன்பர்களே!

2 / 3

தேசபாரதி தீவகம் வே.இராசலிங்கத்தின் 'கனடாக் காவியம்'!

Written by - தகவல்: தீவகம் வே.இராசலிங்கம் -
Sunday, 21 October 2018 05:28 - Last Updated Sunday, 21 October 2018 05:34

3 / 3